

பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, படப்பை ஆ.மனோகரன், துணை மேயர் கோ.காமராஜ், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, அ.தமிழ்மாறன், இ.எஸ். பெர்னாட், ஆர்.நடராஜன், ஆர்.சுரேஷ், ஜி.கே.ரவி, க. தேவேந்திரன் மூ.ரஞ்சன், நரேஷ் கண்ணா, பொன். சதாசிவம், கோல்டு பிரகாஷ், சத்திய பிரபு, எஸ்.கே. நெப்போலியன் உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்



திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் அமரம்பேடு ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைகூட்டத்தில் முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினர், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் பங்கேற்று சிறப்புரையாற்றினர். உடன் பி. வெங்கடாசலபதி, கே.வி.லோகேஷ், மு.மணிபாலன், எம்.மோகன்பாபு, ஆ.சந்திரமோகன், கே.யஷ்வந்த்குமார், சி.அரீஷ்குமார், நா.சீனிவாசன்(ஏ) மதி, கு.கிஷோர், எஸ்.முத்து உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### திருப்பெரும்புதூர் தொகுதி ; குன்றத்தூர் தெற்கு – மத்திய ஒன்றியம் – குன்றத்தூர் – மாங்காடு நகரம்

# வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - இ. முகவர்கள் பயிற்சிக் கூட்டம்!

## தா.மோ.அன்பரசன் தலைமை! டி.ஆர்.பாலு எம்.பி. –கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூலை 3 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருபெரு மந்தூர் சட்டமன்றத் தொகுதி குன்றத்தூர் தெற்கு குன்றத்தூர் மத்திய ஒன்றியம் குன்றத்தூர் நகரம் மாங்காடு நகரம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள்BLA2 வாக்குச்சாவடி இ முகவர்கள் BDA பயிற்சி பாசறை கூட்டம் இன்று (3.07.2025 வியாழக்கிழமை) மாலை 4 மணியளவில் தில்லை மஹால் படப்பையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் தலைமை வகிக்கிறார். குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

குன்றத்தூர் நகர செயலாளர் நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி, மாங்காடு நகர கழக செயலாளர் நகர மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ். ஜபருல்லா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பயிற்சி பாசறைக் கூட்டத்தினை துவக்கி வைத்து கழகப் பொருளாளர் திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு எம்.பி., திருபெரு மந்தூர் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ. மணி நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் இத்தொகுதியில் அடங்கியுள்ள குன்றத்தூர் தெற்கு மத்திய ஒன்றியங்கள் குன்றத்தூர் மாங்காடு நகரங்களின் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் பி எல் ஏ 2 வாக்குச்சாவடி இ முகவர்கள் பி டி ஏ ஆகியோர் மட்டுமே சரியாக மாலை 3:30 மணி அளவில் கூட்டு அரங்கில் பங்கேற்று சிறப்பிக்குமாறு ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்..

### பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ துவக்கி வைக்கிறார்

# பல்லாவரம் வடக்கு பகுதியில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை துவக்கம்

## பகுதிச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை அறிக்கை

பல்லாவரம் ஜூலை 3

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் நமது கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்டக் கழக செயலாளர் மாண்புமிகு அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களின் அறிவிப்பின்படி நமது கழகத் தலைவர் அவர்களின் மண் மொழி மானம் காப்போம் ஒன்றிணைவோம் என்ற உறுதிமொழி உடன் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை 372025 வியாழக்கிழமை காலை 8 மணி அளவில் 17 வது வார்டு சாரா நகர் மெயின் ரோட்டில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் வாக்குச்சாவடி டிஜிட்டல் ஏஜென்ட் வாக்குச்சாவடி தேர்தல் பணி குழு உறுப்பினர்கள் ஆகியோர்களோடு இணைந்து எனது தலைமையில் மாபெரும் உறுப்பினர் சேர்க்கை முகாம் துவக்கப்பட உள்ளது இந்த முகாமில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ கருணாநிதி எம்எல்ஏ அவர்கள் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து வீடு வீடாகச் சென்று கழக அரசின் திட்டங்களை எடுத்துரைத்து உறுப்பினர் சேர்க்கும் பணியை துவக்க வைக்க உள்ளார் எனவே நமது பகுதி கழகத்தில் உள்ள பகுதி கழக நிர்வாகிகள் நமது பகுதியில் உள்ள மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழகச் செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் ஆகிய அனைவரும் முகாமில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் அதைத்தொடர்ந்து வட்டக் கழகச் செயலாளர்கள் தங்கள் வட்டங்களில் உள்ள ஒவ்வொரு பாகமாக சென்று வாக்குச்சாவடி நிலை முகவர்கள் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் தேர்தல் பணிக்குழு மகளிர் அணி உறுப்பினர் இளைஞர் அணி உறுப்பினர் மாமன்ற உறுப்பினர் ஆக அனைவரும் அழைத்துச் சென்று ஒவ்வொரு பாகமாக உறுப்பினர் சேர்க்கும் பணியை மேற்கொள்ளமாறு கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்

### கலைஞர் நகர் தெற்கு பகுதி

# 137 ‘ஆ’ வட்ட கழக பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் அ.கதிரேசன் அறிவிப்பு

சென்னை, ஜூலை 3 -

கலைஞர் நகர் தெற்குப் பகுதி 137 ஆ வட்ட பாக முகவர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது என வட்டச் செயலாளர் அ.கதிரேன் அறிவித்துள்ளார். அது வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மக்கள் மற்றும் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி 137 ஆ வட்டக் கழக பாக முகவர்கள் கூட்டம் கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக அலுவலகத்தில் இன்று (03-07- 2025 வியாழன்) மாலை 6 மணி அளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் 137 ஆ வட்ட கழகத்திற்கு உட்பட்ட பாக முகவர்கள் BLA 2 ,BDA ஆகிய அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டக் கழக பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், இக்கூட்டத்திற்கு வருகை தந்து திராவிட மாடல் முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தை ஏற்று நாம் அனைவரும் பாகங்களில் உறுப்பினர்களை சேர்த்து நம் கழகம் 2026 நமது ஆட்சி மீண்டும் ஏற்பட அரும்பாடும் பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு வட்டச் செயலாளர் அ.கதிரேன் அறிவித்துள்ளார்.

### மக்கள் முதல்வரின் மனிதநேய விழா: நாள் தோறும் 1000 பேருக்கு உணவு!

# ஜூலை3முதல்25வரைநிகழ்ச்சிகள்விவரம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு

சென்னை, ஜூலை 2-

“அன்னம் தரும் அமுத கரங்கள்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:

நாள் 3.7.25 வியாழக்கிழமை - 134 ஆம் நாள் - கொளத்தூர் மேற்கு பகுதி: வட்டம் 69 GKM காலனி, 18 ஆவது தெரு, ஜம் புலிங்கம் மெயின் ரோடு, வட்ட செயலாளர் MJC பாபு வட்டம் 69 அ, பல்லார்டு தெரு, அகரம், வட்ட செயலாளர் P. அதிபதி

நாள் 4.7.25 வெள்ளிக்கிழமை 135ஆம் நாள் - வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 104 (அ), நேரு நகர், திருமங்கலம், வட்ட செயலாளர் ப.லோகுபாபு 2) வட்டம் 104, 18 ஆவது பிரதான சாலை, அண்ணாநகர், வட்ட செயலாளர் சொ.முருகேசன்

நாள் 5.7.25 சனிக்கிழமை 136 ஆம் நாள் - எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 77 அ, புளியந்தோப்பு 1-ஆவது தெரு, மாத்தம்மன் கோயில், - வட்ட செயலாளர் வி. அபாய், 2) வட்டம் 78 அ, சூளை அங்காளம்மன் கோவில் தெரு,- வட்ட செயலாளர் ந.பாலு

நாள் 6.7.25 ஞாயிற்றுக்கிழமை - 137 நாள் - அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 85, அம்பேத்கர் சிலை அருகில், வானகரம் ரோடு, வட்ட செயலாளர் த. கண்ணபிரான் 2) வட்டம் 86, வானகரம் சாலை, அத்திப்பட்டு சின்ன காலனி ( சென்னை மாநகராட்சி பள்ளி அருகில்) , வட்ட செயலாளர் M. கமல் எம்.சி,

நாள் 7.7.25 திங்கட்கிழமை 138ஆம் நாள் - கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 67, தீட்டி தோட்டம் 1வது தெரு, செம்பியம் - வட்ட செயலாளர் K.ஜார்ஜ்குமார், 2) வட்டம் 66, ராம் நகர், முதல் மெயின் ரோடு, விநாயகர் கோவில் அருகில், வட்ட செயலாளர் PTC. S. ரவி

நாள் 8.7.25 செவ்வாய்க்கிழமை 139ஆம் நாள் - துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: 55 ஆவது வட்டம் கோவிந்தப்பா தெரு, சடையப்பன் தெரு, கார்னர் ஏழுகிணறு, வட்ட செயலாளர் எஸ்.புகழேந்தி 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59 நாரயணப்பா ரோடு, என்.எஸ்.சி போஸ் ரோடு பிராட்வே பஸ் ஸ்டாண்ட் (போலீஸ் பூத் அருகில்), வட்ட செயலாளர், டி.சதீஷ்குமார்

நாள் 9.7.25 புதன்கிழமை - 140 ஆம் நாள் - அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 84 ஆ, பஜனை கோயில் தெரு, பட்டரவாக்கம், வட்ட செயலாளர் த.வ. லால், 2) வட்டம் 84, கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில், வட்ட செயலாளர் மூ. விஜயகுமார்

நாள் 10.7.25 வியாழக்கிழமை - 141 ஆம் நாள் - திரு. வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 73, நியூ பாரன்ஸ் ரோடு, தாசமக்கான் தலைமை எம். பெரோஸ்கான் அமைப்பாளர் சிறுபான்மை நல அணி, 2) வட்டம் 73 அ, டிக் காஸ்டர் ரோடு, புளியந்தோப்பு, மாவட்ட அமைப்பாளர் க.ராஜ முகமது நெசவாளர் அணி

நாள் 11.7.25 வெள்ளிக்கிழமை - 142 ஆம் நாள் - திரு. வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71 அ, அருந்ததி நகர், காந்தி சிலை அருகில் வட்ட செயலாளர் மா. ருத்ரமூர்த்தி , 2) வட்டம் 74, நேருஜோதி நகர், அயனாவரம், வட்ட செயலாளர் எஸ். புஷ்பராஜ்

நாள் 12.7.25 சனிக்கிழமை - 143 ஆம் நாள் - எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 108, வைத்தியநாதன் தெரு, விநாயகர் கோவில் அருகில், வட்ட செயலாளர் வான்மதி கதிரவன், 2) வட்டம் 108, எம். எஸ் நகர், (விநாயகர் கோவில் அருகில்) , சேத்தப்பட்டு வட்ட செயலாளர் L. சுந்தர்ராஜன், எம்.சி.

நாள் 13.7.25 ஞாயிற்றுக்கிழமை - 144 ஆம் நாள் - வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) 96 வது வட்டம், P.E.கோயில் மெயின் தெரு, K.M.P.கோயில் தெரு.சந்திப்பு. எ.வேதா. செயலாளர், 2) 98.ஆ.வட்டம், சோமசுந்தரம் 2.வது தெரு.K.H.ரோடு சந்திப்பு, காஞ்சி.செ.துரை.செயலாளர்

நாள் 14.7.25 திங்கட்கிழமை - 145ஆம் நாள் - அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 90, கலைவாணர் காலனி, கொடி கம்பம் அருகில், பாடி புது நகர் மெயின் ரோடு, வட்ட செயலாளர் நெப்போலியன். 2) வட்டம் 93, வண்டியம்மன் கோயில் தெரு, பாடி குப்பம், இளைஞரணி பகுதி துணை அமைப்பாளர் S.ராஜா வட்ட செயலாளர் இரா.டீக்கா.

நாள் 15.7.25 செவ்வாய்க்கிழமை - 146ஆம் நாள் - துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55, தாதா முத்தியப்பன் தெரு, கோவிந்தப்பா தெரு சந்திப்பு வட்ட செயலாளர் RA. அஸ்லாம், 2) துறைமுகம் மேற்கு பகுதி” வட்டம் 57, யானை கவுனி பாலம், ஹவுசிங் போர்டு அருகில் வட்ட செயலாளர், ஜி. ராமமூர்த்தி

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் களாக சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் -அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

# வேளச்சேரி கிழக்கு பகுதியில் நகர்ப்புற நலவாழ்வு மையம் திறப்பு

## பகுதி செயலாளர் துரை கபிலன் அறிக்கை

சென்னை, ஜூலை 3 -

வேளச்சேரி கிழக்குப் பகுதிச் செயலாளர் துரைகபிலன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு பகுதி சாஸ்திர நகர் 8 வது குறுக்கு தெருவில் புதியதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மைய வீடுகளை (இன்று 03-07-2025 வியாழன் கிழமை) காலை 10:00 மணியளவில் திறந்து வைத்து இங்கிருந்து காணொளி வாயிலாக 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மற்றும் 50 ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மருத்துவமனைகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க கழக தலைவர் தங்க தளபதி திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர் அவர்கள் வருகை தர இருப்பதால்

அவர்களை வரவேற்க சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் அறிவுறுத்தலின் பேரில் வேளச்சேரி கிழக்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், மன்ற செயலாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு புத்தகங்கள் வழங்கி வரவேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்

இவ்வாறு வேளச்சேரி கிழக்கு பகுதி கழக செயலாளர் துரை கபிலன் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### சின்னசேலம் ஒன்றியத்தில்

# 75.64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணி!

## உதயசூரியன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

குள்ளக்குறிச்சி, ஜூலை 3-

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், கடத்தூர் முயல் குன்று சாலை முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தில் ரூ.75.64 லட்சம் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைக்கும் பணியினை சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா. உதயசூரியன் தலைமை தாங்கி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய துணை குழு தலைவர் அ.வெ.அன்புமணிமாறன், வட்டார வளர்ச்சி அலுவலர் சுமதி, ஒன்றிய பொறியாளர் அருண்பிரசாத், கடத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் பேபி அய்யாசாமி, ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் ஆற்றல் அரசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் மணி, அய்யாவு, ஏர்வாய்பட்டினம் ஊராட்சி மன்ற தலைவர் ஜோதி பன்னீர்செல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு திருப்போரூர் பேரூர் இளைஞரணி சார்பில் திருப்போரூர் பேரூர் கழகச் செயலாளர் மு.தேவராஜ் ஏற்பாட்டில் தெருமுனைப் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைமை கழகப் பேச்சாளர் நாகம்மை கருப்பையா, இளம் பேச்சாளர் ரூ.கீர்த்தனா, ஒன்றியச் செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், பையனூர் எம்.சேகர், கோல்டு டி.பிரகாஷ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இதில் வி.விஜயகுமார், எஸ்.அஸ்கர் அலி, வி.சந்திரன், ஆர்.பரசுராமன், மு.க.ரவி, ஜி.வாணி, எஸ்.ஏழுமலை, ஆர். சுப்பிரமணி, எஸ்.சசிகலா, தே.செங்குட்டுவன், ஆர்.பவித்ரா, பி.சுரேஷ், கே.கோபிகிருஷ்ணன், ஆர்.சதீஷ், சி. மோனிஷ், எஸ்.கிஷோர்குமார், எம்.பால விக்னேஷ், தமிழ்செல்வம், எஸ்.ஆர்.மணிகண்டன், எஸ்.பாலகிருஷ்ணன் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் வார்டு செயலாளர் ஒன்றிய நிதிகள் கலந்து கொண்டனர்.




கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைபடி சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க நகர் வடக்கு பகுதியில் பாகமுகவர்கள் (BLA2), மற்றும் (BDA) வலைதள முகவர்களுக்கு ”ஓரணியில் தமிழ்நாடு ” உறுப்பினர் சேர்க்கை பயிலரங்கம் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் தாயகம் கவி எம்.எல்.ஏ., தண்டலம் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.